உ

இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், இருக்கண்குடி

சாத்தூர் வட்டம். விருதுநகர் மாவட்டம்.



அருள்மிகு இருக்கண்குடி ஸ்ரீ மாரியம்மன்

## ஆடி பிரமோற்சவ அழைப்பிதழ்

11.8.2017 • வெள்ளிக்கிழமை

# அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்- இருக்கண்குடி




புண்ணிய நதிகளாம் அர்ச்சுனா நதி, வைப்பாறு இரண்டும் ஒன்றாகக் கூடும் ஆலயம் தான் இருக்கண்குடி அருள்மிகு மாரியம்மன் ஆலயம். இத்திருபீடத்தில் ஐக்கியமாகியுள்ள சிவயோக ஞானசித்தர் அருவுருவாய் அன்னையை அனுதினமும் வழிபடுவதாக ஐதீகம். இரு கங்கைகள் கூடுவதால் 'இருக்கண்குடி' என்று புகழ் பெற்ற இவ்வாலயம், மதுரை - திருநெல்வேலி நெடுஞ்சாலையில் சாத்தூருக்கு கிழக்கே 8 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. நித்தம் நித்தம் தன்னைத்தேடிவரும் பக்தர்களைத் தான் நாடிச்சென்று தரிசனம் தருவதற்காக "திரு" உலா வரும் காட்சிதான் திருவிழா. இத்தன்மை மிக்க இருக்கண்குடி அருள்மிகு மாரியம்மன் கோயில் ஆடித்திருவிழாவைக் காண வரும் பக்தகோடிகள் அனைவரின் உள்ளங்களிலும், இல்லங்களிலும் அமைதியும், ஆனந்தமும் பெருகி, வளமும், நலமும் பெற்று வாழவேண்டும் என்று அன்னையைப் பிரார்த்திக்க அன்புடன் அழைக்கின்றோம்.

உதவி ஆணையர் / செயல் அலுவலர்
மற்றும்
பரம்பரை அறங்காவலர்கள்

இவ்வாண்டு வீதி உலா வருகின்ற உற்சவ மூர்த்தியுடன் இருந்து எழுந்தருள் செய்யும் பரம்பரை பூசாரிகள்

**திரு. ஜோதியான் பூசாரி வகையறா • திரு. முத்துராமன் பூசாரி வகையறா**

இவ்வாண்டு மூலவருக்கு சிறப்பு அபிஷேகம், சிறப்பு அலங்காரம், சிறப்பு ஆராதனை

**திரு. சங்கன் பூசாரி வகையறா இருக்கண்குடி.**

# திருக்கோயில் வரலாறு



சுமார் 450 ஆண்டுகளுக்கு முன்பாக தென் தமிழ்நாட்டில் மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியாகிய சதுரகிரி மகாலிங்கம் மலையில், சிவயோக ஞானசித்தர் என்ற தவயோகி கடும் தவம் மேற்கொண்டு, அன்னை பராசக்தியிடம், "நான் யோக நிஷ்டையாகும் (ஐக்கியம்) இடத்தில் என் அன்னை பராசக்தி சிவசொரூபியாக பீடமிட்டு அமர்ந்து அருள் பாலிக்க வேண்டும்", என்ற அரிய வரம் பெற்றார்.

ஐந்து நதிகள் சங்கமிக்கும் புண்ணிய பூமியில் ஐக்கியமாக வேண்டும் என்ற அன்னை பராசக்தியின் வார்த்தைகளை ஏற்று அங்கிருந்து நதிகள் சங்கமம் ஆகின்ற இத்திருத்தலத்தைத் தேர்வு செய்து அந்த இடத்திலேயே தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டார்.

இந்நிலையில் நாடெங்கும் ஊழிப்பிரளயம் ஏற்பட்டு, காட்டாற்று வெள்ளத்தால் நாட்டின் பல கிராமங்கள் அழிந்தன. அந்தப் பெரு வெள்ளத்தால் இழுத்துவரப்பட்ட அன்னை பராசக்தியின் திருஉருவச் சிலை, சித்தர் ஐக்கியமாகிய இடத்தை அடைந்ததும், வெள்ளத்திலிருந்து விடுபட்டுச் சுழலெடுத்து பூமிக்குள் புதைந்து கொண்டது.

அர்ச்சுனா நதியின் கரையிலிருக்கும் இருக்கண்குடி கிராமப் பெண்கள் சாணம் சேகரித்து விட்டு, சாணக்கூடையை தலைக்குத் தூக்க முயற்சிக்கும் போது, திருக்கோயிலின் தற்போதைய பரம்பரை அறங்காவலர்கள் / பூசாரிகளின் குடும்பத்தைச் சார்ந்த மூதாதையரான **இராமசாமி பிள்ளை அவர்களின் மனைவி பரிபூரணத்தம்மாள்** என்ற பெண்ணின் சாணக்கூடையை மட்டும் தரையிலிருந்து எடுக்க முடியவில்லை. சாணத்தையெல்லாம் பரிபூரணத்தம்மாள் அகற்றிய பிறகும் எடுக்க முடியவில்லை. அனைவரும் அதிர்ச்சியோடு நிற்க, அந்தப் பெண்ணுக்கு அருள்வந்து தான் பூமிக்குள் புதைந்திருக்கும் சம்பவத்தைச் சொல்லி, "நான் மாரியம்மா, என்னைத் தோண்டியெடுத்து வழிபட்டு வந்தால் கைவிடாமல் காப்பாற்றுவேன்" என்று கூறி வலக்கை கொடுத்ததும், புதையுண்டிருந்த அம்மனைத் தோண்டி எடுத்து பிரதிஷ்டை செய்து வழிபட்டனர்.

எங்கும் நிறைந்த பரம்பொருளாய், பெருஞ்சுடராய், தம்மை வழிபடும் பக்தர்கட்கு தக்கவரம் தந்து, தன் நிலையில் வைத்துப் பாதுகாக்கும் தன்னிகரில்லாத தாய் தான் இவ்வாலயத்தில் அருள்பாலிக்கும் இருக்கண்குடி அருள்மிகு மாரியம்மா.

அன்னை பராசக்தியின் அருள்வாக்கு பலித்ததாலும், மகிமையாலும் நாடி வந்தவர்களுக்கெல்லாம் நல்லபலன் கிடைத்ததாலும், வரம் வேண்டியும் வாழ்வு வேண்டியும், வருகின்ற மக்களுக்கெல்லாம் பரிபூரண நிம்மதியும், நிறைவும் கிடைப்பதாலும், இருக்கண்குடி அருள்மிகு மாரியம்மனுக்கு பெரும் கோயில் எழுப்பி குடமுழுக்குவிழா நடத்தப்பட்டது. அதைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஆடி, தை, பங்குனி மாதங்களில் திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

"பெரும்துதி, வெற்றி, வலி, கல்வி, செந்நெல், பெருக்காம், நல்லூழ்,
அரும்பொருள், உண்மை, துணிவு, நன்மக்கள், அழகு, இளமை,
தரும் தண்ணுகர்ச்சி, பன்னோயின்மை, வாழ்நாள் தமியனுக்கு
வரும் பதினாறும் தந்தாள் இருக்கங்குடி மாரிமுத்தே"




இத்திருக்கோயிலின் தலவரலாறு, அர்ச்சனை மற்றும் அபிஷேகங்களுக்கான கட்டண விபரங்கள், திருவிழா தேதிகள், திருக்கோயிலில் நடைபெற்று வரும் அன்னதானம் மற்றும் ஆன்மீகப் பணிகள் பற்றி விபரங்களை இணையதளத்தில் (http://www.irukkangudimariamman.tnhrce.in) என்ற முகவரியில் காணலாம்.

மின்னஞ்சல் முகவரி : mariammanac@gmail.com

**நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :**

உதவி ஆணையர் / செயல் அலுவலர்

**அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில்**

இருக்கண்குடி - 626 202.

சாத்தூர் வட்டம், விருதுநகர் மாவட்டம்

தொலைபேசி : 04562 - 259614, 259864, 259669

# ஆடிப்பெருந் திருவிழா

## 03.08.2017 வியாழக்கிழமை





### கலை நிகழ்ச்சிகள்

**மாலை : 6.00 மணி**

**நாதஸ்வரம்**

உபயம் : **வி.கே.எம். ராஜரத்தினம் குழுவினர்,** சாத்தூர்

**இரவு : 7.00 மணி**

**ஆன்மீகச் சொற்பொழிவு**

திருக்கோயில் ஆன்மீகச் சொற்பொழிவாளர்

புலவர். **திரு. தெ.சு. கோபிநாத்** அவர்கள்

# ஆடிப்பெருந் திருவிழா கொடியேற்றம்

## 04.08.2017 வெள்ளிக்கிழமை



நிகழும் மங்களகரமான 1193ம் ஆண்டு ஹேவிளம்பி வருடம் ஆடி திங்கள் 19ம் நாள் (04-08-2017) வெள்ளிக்கிழமை மூலம் நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 10.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் குருபகவான் ஓரையில், அமிர்தயோகத்தில் கன்னியா லக்னத்தில் திருக்கோயிலில் கொடியேற்ற வைபவம் நடைபெறும்.

அன்று மாலை 5.00 மணியளவில் இருக்கண்குடி மேலமடை குடும்புகள் தலைமையில் இருக்கண்குடி கீழத்தெரு பொதுமக்கள் திருக்கோயில் தலைவாசல் முன்பு வேப்பிலைக்கொடி கட்டுவார்கள். இதில் இருக்கண்குடி, நத்தத்துப்பட்டி, கே.மேட்டுப்பட்டி, என். மேட்டுப்பட்டி கிராமப் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

**காலை : 9.00 மணி**

**நாதஸ்வரம்**

உபயம் : **வி.கே.எம். ராஜரத்தினம் குழுவினர்,** சாத்தூர்

**இரவு : 8.00 மணி**

**சமயச்சொற்பொழிவு : ஸ்ரீராமன் விபிஷணனுக்கு அடைக்கலம்**

உபயம் : 'ஆன்மீகச் செம்மல்'

**திரு. ஆர்.வி. வேலுச்சாமி** அவர்கள்



## கலைநிகழ்ச்சிகள்

### 10.08.2017 வியாழக்கிழமை

மாலை 6.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

உபயம் : திரு. B. முத்துமணி சங்கரின் வில்லிசை நிகழ்ச்சி

கோவில்பட்டி

இரவு 9.00 மணி முதல் 12.00 மணி வரை

உபயம் : G.P.S. வழங்கும் ஓம் சக்தி தெம்மாங்கு பாடல்கள்

இராஜபாளையம்

இரவு 12.30 மணிக்கு மேல்

உபயம் : திரு. B. திருப்பதி பாலகன் குழுவினரின் வில்லிசை நிகழ்ச்சி

கோவில்பட்டி



# ஆடி மகா உற்சவம் 11.08.2017 வெள்ளிக்கிழமை

நிகழும் மங்களகரமான 1193ம் ஆண்டு ஹேவிளம்பி வருடம் ஆடி திங்கள் 26ம் தேதி நாள் 11.08.2017 கடைசி வெள்ளிக்கிழமை உத்திரட்டாதி நட்சத்திரமும், சித்தயோகமும் கூடிய சுபயோக சுபதினத்தில் அன்று காலை 9.00 மணிக்கு மேல் 10.30 மணிக்குள் குருபகவான் ஓரையில் கன்னியா லக்கனத்தில் உற்சவ மாரியம்மனுக்கு கும்பாபிஷேகம், அலங்காரம், தீபாராதனை நடைபெறும்.

மேற்படி மதியம் 1.30 மணிக்கு மேல் 2.30 மணிக்குள் ரிஷப வாகனத்தில் மாரியம்மன், உற்சவர் கோயிலில் இருந்து எழுந்தருள் செய்து வீதிவலம் வந்து, மூலவர் கோயில் சென்றடைந்து, இரவு முழுவதும் அம்மன் சர்வ அலங்காரத்துடன் சப்பரத்தில் அமர்ந்து காட்சி தருகிறார்.

மறுநாள் 12.08.2017 சனிக்கிழமை அதிகாலை 4.00 மணிக்கு மேல் 5.00 மணிக்குள் புறப்பாடாகி மீண்டும் உற்சவர் கோயிலில் சென்றடைகிறார்.

கலிங்கல் மேட்டுப்பட்டி கிராமப் பொதுமக்கள் இந்த வருடம் அம்மனை ரிஷப வாகனத்தில் பவனிவரச் செய்வார்கள். இதில் நத்தத்துப்பட்டி கிராமப் பொதுமக்களும் கலந்து கொள்வார்கள். இருக்கண்குடி, நெ.மேட்டுப்பட்டி, கே.மேட்டுப்பட்டி (கீழத்தெரு) கிராமப் பொதுமக்கள் செண்டா, விருது, குடை, மேளம் சேவித்து அம்மனை அழைத்து வந்து சிறப்பு செய்வார்கள். இதில் அப்பனேரி கிராமப் பொதுமக்கள் நகரா ஒலி எழுப்பி உற்சவத்தை சிறப்பு செய்வார்கள்.

**காலை 10.00 மணி முதல் 12.00 மணி வரை**

உற்சவர் கோவில் : **நாதஸ்வரம்**

உபயம் : திரு. **வி.கே.எம். ராஜரத்தினம் குழுவினர்,** சாத்தூர்

**இரவு 8.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை**

உபயம் : திரு. **G. பிரியசக்தி குழுவினரின் இன்னிசை கச்சேரி,** சங்கரன்கோவில்

**இரவு 11.00 மணி முதல் 2.00 மணி வரை**

**பக்தி இன்னிசை கச்சேரி**

உபயம் : **முத்தாரம்மன் டிரஸ்ட்,** குலசை.

**இரவு 2.00 மணிக்கு மேல்**

**வில்லிசை கச்சேரி**

உபயம் : திரு. **P. கணேசபாலகன் குழுவினர்** கோவில்பட்டி

## ஆடிப்பெருந்திருவிழா உபயதாரர்கள் விபரப்பட்டியல்

| வ. எண். | தலைப்பு / உபயம் | பெயர் மற்றும் விலாசம் |
|---|---|---|
| 1 | தகரப் பந்தலமைப்பு மற்றும் அலங்காரம் | திருக்கோவில் நிர்வாகம் |
| 2 | மின் அலங்காரம் | திருக்கோவில் நிர்வாகம் |
| 3 | தேங்காய் | திருக்கோவில் நிர்வாகம் |
| 4 | உணவு ஏற்பாடு | திரு. கே. அப்துல் வஹாபுதீன்<br>வழக்கறிஞர்,<br>பாளையங்கோட்டை |
| 5 | திருக்கோவில் வெள்ளையடிப்பு மற்றும் வர்ணம் பூசுதல் வேலை | திரு. S.R. செந்தில்குமார் - S. செல்வி<br>SRS பைனான்ஸ், மதுரை - 5 |
| 6 | பாதை செப்பனிடுதல் | திருக்கோயில் நிர்வாகம் |
| 7 | வெற்றிலை பாக்கு | திரு. K. கண்ணன்<br>அரசு ஒப்பந்தக்காரர், N. மேட்டுப்பட்டி<br>நென்மேனி (அஞ்சல்) சாத்தூர் வட்டம் |
| 8 | சுவரொட்டி | ஜீ.பி. எண்டர்பிரைசஸ், சிவகாசி. |
| 9 | கொடியேற்றம் அழைப்பிதழ் | திரு. ஆர். இரவிச்சந்திரன்<br>செந்தில்முருகன் கிரையண்டிங் மில், சிவகாசி. |
| 10 | வாழை மரங்கள் | திரு. P. சுவாமிநாதன் ஜோதிடர்<br>திரு. T.R.S.A. இசக்கிமுத்து ஜோதிடர்<br>S. பழனி அம்பாள் சூப்பர் மார்க்கெட்,<br>வீரவநல்லூர். |
| 11 | குடி தண்ணீர் சப்ளை | திரு. ஜி. வேலு<br>வெல்கம் ஹைடெக் டிஜிட்டல் ஸ்டுடியோ<br>தூத்துக்குடி |
| 12 | உற்சவர் அம்மன் புஷ்ப அலங்காரம் | 11-08-2017<br>திரு. எம். ஜெகதீஷ் சந்திரபோஸ் - கலைச்செல்வி<br>வாழை இலை வியாபாரம் - அருப்புக்கோட்டை |
| 13 | உற்சவர் அம்மன் புஷ்ப அலங்காரம் | 12-08-2017<br>திரு. பாலகிருஷ்ணன் (நிலவாக)<br>அவர்கள் குடும்பத்தினர், அருப்புக்கோட்டை |
| 14 | ஆடிப்பெருந்திருவிழா அழைப்பிதழ் | திரு. எல். பாலசுப்பிரமணியன் - குருபாக்கியம்<br>விஜயா பிரஸ், சிவகாசி. |

### திருக்கோயிலில் விற்பனை செய்யப் பெற்று வரும் கட்டணச் சீட்டுகள் விலை விபரம்

| | | | |
|---|---|---|---|
| 1 | முடிகாணிக்கை சீட்டு | .... | ரூ. 30-00 |
| 2 | சிறப்பு தரிசனச் சீட்டு | .... | ரூ. 10-00 |
| 3 | காது குத்துச் சீட்டு | .... | ரூ. 50-00 |
| 4 | கயிறு குத்துச் சீட்டு | .... | ரூ. 5-00 |
| 5 | ஆயிரங்கண் பானை சீட்டு | .... | ரூ. 5-00 |
| 6 | உருவம் சீட்டு | .... | ரூ. 5-00 |
| 7 | வேன், கார், கட்டணச் சீட்டு | .... | ரூ. 10-00 |
| 8 | பஸ், லாரி கட்டணச் சீட்டு | .... | ரூ. 15-00 |
| 9 | இரு சக்கர வாகன கட்டணச் சீட்டு | .... | ரூ. 2-00 |
| 10 | மேளம் சீட்டு | .... | ரூ. 25-00 |


அழைப்பிதழ் அன்பளிப்பு மற்றும் அச்சு

L.பாலசுப்பிரமணியன்-குருபாக்கியம் குடும்பத்தினர்

விஜயா பிரஸ், சிவகாசி. ✆ 04562 - 221965, 99944 50050


## மாண்புமிகு தமிழக முதல்வரின் அன்னதானத் திட்டம் நன்கொடை வேண்டுகோள் அறிவிப்பு

இத்திருக்கோயிலின் நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் நாள்தோறும் 100 பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் அன்னதானத் திட்டம் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. ரூ.2500/-ஐ செலுத்தினால் நாள் ஒன்றுக்கு 100 பக்தர்களுக்கு உணவும் ரூ. 25,000/- செலுத்தினால் அதனை முதலீடாக செய்து அதிலிருந்து கிடைக்கப் பெறும் வட்டியிலிருந்து வருடத்திற்கு உபயதாரர் விரும்பும் ஒரு நாளில் (திருமண நாள், பிறந்த நாள் போன்றவைகள்) 100 பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். நன்கொடை செலுத்தி அன்னதானம் செய்து அருள்மிகு மாரியம்மனின் அருள் பெற்றுய்ய அன்புடன் வேண்டுகிறோம்.

குறிப்பு : அன்னதான நன்கொடைகளுக்கு வருமானவரி சட்டம் பிரிவு 80(G)ன் படி வரிவிலக்கு உண்டு

**11-08-2017 வெள்ளிக்கிழமை அன்று தங்கக் கவசம் அணிந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார்**




அம்மனுக்கு தங்கக்கவசம் சாத்துபடி செய்ய விரும்பும் பக்தர்கள் சாத்துபடிக் கட்டணம் ரூ. 750/- செலுத்தி, தாங்கள் விரும்பும் தேதியைப் பதிவு செய்து கொள்ளலாம் அவ்வாறு முன்பதிவு செய்யப்பட்ட நாளில். அன்றைய கட்டளைதாரர் சார்பாக அம்மனுக்கு தங்கக்கவசம் சாத்துபடி செய்யப்பட்டு சிறப்பு பூஜைகள் நடத்தி திருக்கோயில் சார்பாக பிரசாதம் வழங்கப்படுகிறது.

### திருக்கோயிலில் உள்ள தங்கும் விடுதிகள் மற்றும் பொங்கல் மண்டபங்கள் வாடகை விபரம்

| வ.எண். | விடுதி / மண்டபம் விபரம் | எண்ணிக்கை | ஒரு நாள் வாடகை ரூ |
|---|---|---|---|
| 1. | பராசக்தி விடுதி | 24 அறைகள் | 200/- |
| 2. | ஈஸ்வரி இல்லம் | 4 | 180/- |
| 3. | அபிராமி, ஆதிபராசக்தி பராசக்தி இல்லம் | 3 | 230/- |
| 4. | தங்கும் விடுதி (தெற்கு) | 5 | 230/- |
| 5. | மாரி, தேவி, மீனாட்சி இல்லம் | 3 | 330/- |
| 6. | அம்பிகை இல்லம் | 2 | 650/- |
| 7. | மாரி மண்டபங்கள் | 8 | 1050/- |
| 8. | விரத (வயன) மண்டபம் | 1 | 800/- |

ஆத்தாளை, எங்கள் அபிராமவல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம்பூ நிறத்தாளை, புவியடங்கக்
காத்தாளை, அங்குசபாசாங்குசமும் கரும்பும் அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவோர்க்கு ஒரு தீங்கில்லையே.

- அபிராமி அந்தாதி



அர்ச்சுனா நதி நடுவில்
அம்மன் எழுந்தருளும் காட்சி